**நாள் 12.02.2026 CC 17/2023 அ.சா. 1**

**பெயர் சந்திரசேகர் த/பெ.சுப்பையா**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி)

(1) நான் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். எனது சொந்த ஊர் திண்டுக்கல். மைவாடி கிராமம் நில வருவாய் ஆய்வாளராக சுமார் 2 வருடம் பணிபுரிந்தேன். புகாரில் எதிரி எத்தனை அடி அகலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நீளம் 109 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வண்டித்தடம் புல எண்.395/7 என்பதன் மொத்த நீள, அகலம் எவ்வளவு என்றால் தெரியாது. தங்கவேல் என்பவர் கொடுத்ததாக சொல்லும் புகாரை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. மாவட்ட ஆட்சியரிடம் குறை தீர்ப்பு நாளில் கொடுக்கப்பட்ட மனு நேரடியாக என்னிடம் விசாரணைக்கு வராது என்றால் சரிதான். வட்டாட்சியருக்கு அனுப்பப்படும். தங்கவேல் மற்றும் அவரது மனைவி சேர்ந்து புகார் கொடுத்தார்களா என்றால் தங்கவேல் மட்டும் தான் புகார் கொடுத்தார். எனது புகாரில் தங்கவேல் மற்றும் அவரது மனைவி பழனியம்மாள் ஆகியோர் கொடுத்த புகார் மனு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

(2) எதிரி மட்டும் ஆக்கிரமிப்பு செய்ததாக புகாரில் உள்ளதா அல்லது வேறு யாரும் ஆக்கிரமிப்பு செய்ததாக உள்ளதா என்றால் எதிரி ஆக்கிரமிப்பு செய்ததாக உள்ளது. ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லப்படும் பகுதிக்கு அருகில் உள்ள பூமி எதிரிக்கும் மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து மடத்துக்குளம் வட்டாட்சியருக்கு புகார் மனு அனுப்பி வைக்கப்பட்டது. எதிரிக்கு விசாரணை சம்மந்தமாக நான் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை நில அளவையர் கொடுத்தார். அறிவிப்பின் நகலை போலீஸில் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நில அளவையர் அறிவிப்பை எதிரி வாங்க மறுத்ததாக காட்ட எந்த ஆவணமும் போலீஸில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, எதிரியால்

வாங்க மறுக்கப்பட்டது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(3) புகார் மனு மீது யார் விசாரணை மேற்கொண்டு எவ்வாறு ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டது என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2021 முதல் 2023ம் ஆண்டு வரை நில வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தேன். தேதி சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு சம்மந்தப்பட்ட புகாருக்கு முன்பு எதிரி ஆக்கிரமிப்பு செய்ததாக வேறு எந்த புகாரும் வரவில்லை. 23.12.2022ம் தேதியன்று அளவீடு செய்யும் போது எதிரி ஆக்கிரமிப்பு செய்ததாக தெரிய வந்தது. அதற்கு முன்பு சொத்தை அளவீடு செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு முன்பு எதிரி எவ்வளவு நீளம், அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்தார் என்று தெரியாது என்றால் சரிதான்.

(4) ஆக்கிரமிப்பு அகற்ற முற்பட்டதாக சொல்லப்படும் தினத்தில் காலை சுமார் 11.00 மணிக்கு அங்கு சென்றோம். க.ச.எண்.395/7 நிலத்தின் கூட்டு வரைபடம் நில வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ளது. வரைபடத்தில் வண்டித்தடம் எதுவும் இல்லை என்றால் வண்டித்தடம் உள்ளது. வண்டித்தடம் யாருடைய பூமியில் சென்று முடிகிறது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லப்படும் பகுதியை சுற்றிலும் நான்கு பக்கமும் அளந்தால் தான் ஆக்கிரமிப்பை கணக்கிட முடியும் என்றால் சரிதான். நான்கு எல்லை சம்மந்தமான நபர்களுக்கும் அறிவிப்பு கொடுக்கப்படும் என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லப்படும் பகுதியின் சுற்றியுள்ளவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. வண்டிப்பாதையின் மறு பக்கம் யாருடைய பூமி என்றால் தெரியாது. சுற்றியுள்ள பூமிகள் யாருடையது என்று தெரியாது.

(5) நான், வட்டாட்சியர் மற்றும் துங்காவி உள் வட்டத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் சென்றோம். குறிப்பிட்டு எத்தனை பேர் சென்றோம் என்று ஞாபகம் இல்லை. அந்த உள்வட்டத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஆக்கிரமிப்பு அகற்றிய விவரம் தெரியும். எந்த வகையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது என்றால் தென்னை மரங்கள் வைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. எத்தனை மரங்கள் இருந்தது என்றால் தெரியாது. சுமார் 50 மரங்கள் எடுத்திருப்போமா என்றால் 6– 7 மரங்கள் எடுத்திருப்போம். அந்த மரங்கள் சுமார் 30 வயதுள்ள தேங்காய் தரக்கூடிய மரங்கள் என்றால் சரிதான். 3 மணி

நேரம் அளவீடு செய்திருப்போமா என்றால் செய்திருப்போம். அளவீடு செய்யும் போது தனி நபர்கள் வேறு யாரும் இல்லை. ஆக்கிரமிப்பு எடுக்கும் போது புகார்தாரர் தங்கவேல் அங்கிருந்தார்.

(6) நாங்கள் அங்கு சென்று 3 மணி நேரம் கழித்து தான் JCB வாகனத்தை வரச்சொன்னோம். அகற்றப்பட்ட மரங்கள் அங்கேயே போடப்பட்டது அலுவலகத்திற்கு எடுத்து வரவில்லை. ஆக்கிரமிப்பு அகற்ற சுமார் 2 மணி நேரம் ஆனது. ஆக்கிரமிப்பு அகற்றிவிட்டு சுமார் 2 மணி நேரம் கழித்து காவல் நிலையம் வந்து புகார் கொடுத்திருப்பேனா என்றால் இருக்கும். புகார் மனு காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். கணிணியில் காவலர்கள் தான் தட்டச்சு செய்தார்கள். புகார் கொடுக்கும் போது மாலை சுமார் 4–5 மணி இருக்கும். புகார் கொடுக்கும் போது வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் இருந்தார்கள். புகார் கொடுத்து முடிக்கும் போது சுமார் இரவு 08.00 மணி இருக்கும் என்றால் சரிதான். புகார் கொடுத்த பின்பு சம்மந்தப்பட்ட இடத்திற்கு இன்று வரை செல்லவில்லை. பொதுவாக ஆக்கிரமிப்பு அகற்றுவது சம்மந்தமாக ஆட்சியருக்கு தகவல் தெரிவிக்கப்படும். அப்படி தகவல் தெரிவித்ததாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் நான், வட்டாட்சியர், மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் சென்றதாக உள்ளது என்றால் சரிதான். மூன்று பேரிடமும் அலைபேசி இருந்தது. என்னிடம் புகைப்படம் எடுக்கக்கூடிய அலைபேசி அப்போது இல்லை.

(7) டேப் பிடித்து அளவீடு யார் செய்தது என்றால் நான், வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அளவீடு செய்தோம். எதிரி பூமியின் காலை எண் தெரியாது. அளவீடு செய்யும் போதும், ஆக்கிரமிப்பு அகற்றும் போது எதிரியின் கணவர் மற்றும் மகன் முத்து மகேந்திரன் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். அளவீடு செய்த போது எதிரி தடுக்கவில்லை. நாங்கள் வட்டாட்சியருடன் காலை 11.00 மணிக்கு செல்லும் போதே JCB இயந்திரம் அழைத்துச் சென்றோம். JCB இயந்திரம் எந்த பகுதியில் வரவழைக்கப்பட்டது என்று தெரியாது. என்னுடைய புகார் JCB இயந்திரத்தின் குறுக்கே எதிரி படுத்தது சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேன். JCB வாகனத்தில் இருந்து எவ்வளவு தூரம் முன்னால் எதிரி குறுக்கே படுத்தார் என்றால் முன் பகுதியில் படுத்தார். இது சம்மந்தமாக

புகைப்படம் எடுக்கவில்லை.

(8) எதிரியை யாரும் தடுக்கவில்லையா என்றால் பெண் போலீசார் அவரை தடுத்தார்கள். பெண் காவலர்கள் அங்கு எப்படி வந்தார்கள் என்றால் எங்களை மறித்த உடன் நாங்கள் அழைத்தோம். 2 பெண் காவலர்கள் இருந்தார்கள். அவர்கள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று தெரியாது. எத்தனை மணிக்கு சுமாராக வந்திருப்பார்கள் என்றால் 12 மணிக்கு வந்திருப்பார்கள். பெண் காவலர்கள் வந்தது சம்மந்தமாக புகாரில் சொல்லவில்லை. காவல் துறைக்கு நான் தகவல் சொல்லவில்லை. கிராம நிர்வாக அலுவலர் தகவல் சொன்னார். எதிரி அறிவிப்பை பெற்றுக்கொள்ள மறுத்ததாக சொல்லப்படும் நாளில் இருந்து எத்தனை நாட்கள் கழித்து ஆக்கிரமிப்பை அகற்றினோம் என்றால் ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு ஒரு வாரம் முன்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அவர் வாங்க மறுத்தார். புகாருடன் வண்டித்தடத்தின் வரைபடம் எதுவும் கொடுக்கவில்லை. விசாரணையின் போதும் கொடுக்கவில்லை. எதிரியின் கணவர் மற்றும் மகனுக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை.

(9) நான், வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஒரே அரசு வாகனத்தில் தான் சென்றோம். பெண் காவலர்கள் எதிரியை அகற்றி காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். காலை 11.30 மணிக்கு அழைத்து வந்தார்களா என்றால் இல்லை மாலை அழைத்து வந்தார்கள். பெண் காவலர்கள் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். பெண் காவலர்கள் காவல் துறை வாகனத்தில் எதிரியை அன்று காவல் நிலையம் அழைத்து வந்தார்கள். எதிரி காவல் நிலையத்திற்கு வந்து சுமார் 2 மணி நேரம் கழித்து நான் காவல் நிலையம் வந்தேன். புகார் கொடுத்தற்கு பின்பு போலீசார் என்னை இது சம்மந்தமாக எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் நில அளவையர் நோட்டீஸ் சார்வு செய்ய சென்றார். வாங்க மறுத்துவிட்டார்.

(10) ஆக்கிரமிப்பு அகற்றுவதை எதிரி தடுத்ததாக மாவட்ட ஆட்சியருக்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று புகார் கொடுப்பதாக புகாரில் இல்லை என்றால் சரிதான். வட்டாட்சியர் அங்கு தான் இருந்தார் அவரிடம் வாய் மொழியாக உடனடியாக அனுமதி பெற்று புகார் கொடுத்தேன். எதிரி பூமிக்கு கிழக்கே ஓடை செல்கிறது என்றால் ஞாபகம் இல்லை. எதிரிக்கும், தங்கவேல்

என்பவருக்கு இடையே ஏற்கனவே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. வண்டித்தடம் தென்வடலாக இருந்தது. தென்வடல் வண்டித் தடத்தில் கிழக்கு பகுதியில் ஆக்கிரமிப்பு இருந்தது. செக்கானோடைக்கும், எதிரி பூமிக்கும் இடையே உள்ள ஓடை புறம்போக்கு ஆக்கிமிப்பு சம்மந்தமாக எதிரிக்கும் ஏற்கனவே நிறைய அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு முன்னால் இருந்த நில வருவாய் ஆய்வாளர் ஓடைக்கும், எதிரி நிலத்திற்கும் இடையே இருந்த ஓடை புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு அகற்றியுள்ளார். அது சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியாது. அரசியல் காரணங்களுக்காக அந்த நிலத்தில் ஆக்கிரமிப்பு அகற்றி பட்டா கொடுத்ததை நான் தான் முன் நின்று செய்தேன் என்றால் சரியல்ல எனக்கு முன்னால் இருந்த அலுவலர் சுமார் 109 பட்டா அந்த இடத்தில் கொடுத்துள்ளார். உரிமையியல் வழக்கு வாபஸ் வாங்கச் சொல்லி எதிரி மறுத்ததால் அவர் இல்லாத சமயத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட மற்றொரு பகுதியில் இருந்த மரங்களை வேண்டுமென்றே அகற்றியுள்ளோம் என்றும் பொய்யாக இந்த வழக்கின் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையாக ஆக்கிரமிப்பு இருந்தால் அளவீடு செய்யப்பட்டு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கும் என்றும் ஆக்கிரமிப்பு இல்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:55:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

நாள் 12.02.2026 CC 17/2023 அ.சா. 2

பெயர் செல்வி

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி)

(1) மடத்துக்குளத்தில் 05.07.2022 முதல் 2023ம் வருடம் நவம்பர் மாதம் வரை வட்டாட்சியராக இருந்தேன். புகார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. அந்த புகாரை நான் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அளந்து பார்த்து தான் ஆக்கிரமிப்பு இருந்ததாக தெரிந்தது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் ஆக்கிரமிப்பின் அகலம் சொல்லவில்லை. எவ்வளவு அகலம் ஆக்கிரமிப்பு என்று தெரியாது என்றால் அளவீடு செய்யும் போது 1 மீட்டர் அகலம் என்று தெரிந்தது. தென்னை மரங்கள் வைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. சுமார் 50 மரங்கள் இருந்திருக்குமா என்றால் இல்லை எத்தனை மரங்கள் என்று சரியாக ஞாபகம் இல்லை. ஆக்கிரமிப்பில் இருந்த மரங்களை எடுத்துவிட்டோம். புகாரை தங்கவேல் கொடுத்தார். தங்கவேல் மனைவி புகார் கொடுக்கவில்லை.

(2) ஆக்கிரமிப்பு எதிரி செல்லம்மாள் மட்டும் தான் செய்திருந்தார். வண்டித்தடத்தின் மொத்த நீள, அகலம் தெரியாது. க.ச.395 சம்மந்தப்பட்ட ஆவணங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளது. ஆவணங்கள் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. தங்கவேல் கொடுத்ததாக சொல்லும் புகாரின் பேரில் எதிரியை நான் விசாரணை செய்யவில்லை. தங்கவேலை விசாரித்தோம். எதிரிக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. வாங்க மறுத்துவிட்டார். அறிவிப்பை நான் கொடுத்தேனா என்றால் நில அளவையர் கொடுத்தார். அந்த அறிவிப்பை நான் போலீசாரிடம் புகார் கொடுக்கும் போது கொடுத்தேன். அறிவிப்பை எதிரி வாங்க மறுத்து அது குறித்த குறிப்புடன் அறிவிப்பு எனது அலுவலகத்தில் பெறப்படவில்லை.

(3) ஆக்கிரமிப்பு அகற்ற காலை 11.00 மணிக்கு சென்றோம். என்னுடன், கிராம

நிர்வாக அலுவலர், நில வருவாய் ஆய்வாளர் மற்றும் அளவையர் சென்றோம். நில வருவாய் ஆய்வாளர் என்னுடன் வந்தார். மற்றவர்கள் தனியாக வந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் எங்கள் நால்வரைத் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரியல்ல. அரசு அலுவலர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்றால் வருவாய் துறை அலுவலர்கள் யாரும் இல்லை காவலர்கள் இருந்தார்கள்.

(4) காவல் துறைக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திற்கு முன் தினம் தகவல் சொன்னோம். காவலர்கள் எங்களுடன் வந்தார்கள். மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலின் பேரில் தான் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. அளவீடை யார் செய்தார்கள் என்றால் நில அளவையர் செய்தார். எவ்வளவு நேரம் அளவீடு செய்தோம் மாலை 04.00 மணி வரை ஆனது. அப்போது தான் ஆக்கிரமிப்பு தெரிய வந்தது. அதன் பின்பு ஆக்கிரமிப்பு அகற்றி சுமார் 3 மணி நேரம் ஆனது. தென்னை மரங்கள் காய்ப்பு உள்ள மரங்களாக இருந்தது. 30 வருடங்கள் வயதுடையதாக இருக்கும் என்றால் தெரியாது. எத்தனை வயது என்று தெரியாது. அகற்றப்பட்ட மரங்களை அங்கேயே போட்டுவிட்டோம். வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டு வரவில்லை.

(5) JCB இயந்திரம் காலை எங்களுடன் வந்தது. ஆக்கிரமிப்பு அகற்றியதாக சொன்ன சமயத்தில் நிறைய மக்கள் இருந்தார்கள். செல்லம்மாளின் கணவரும், மகனும் ஆக்கிரமிப்பு அகற்றும் போது இருந்தார்களா என்றால் இல்லை. சாட்சி மீண்டும் கூட்டத்தில் இருந்தார்களா என்று பார்க்கவில்லை என்று சொன்னார். செல்லம்மாள் பூமிக்கும், செக்கானோடைக்கும் இடையே உள்ள பூமி சம்மந்தமாக எதிரி உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அதில் நாங்கள் வட்டாட்சியராக எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் இலவச வீட்டு மனை கொடுக்கப்பட்டு எதிரி ஆக்கிரமிப்பு செய்து தென்னை மரம் வைத்துள்ளார். இலவச வீட்டு மனை பட்டா கொடுக்கப்பட்ட இடமும், இந்த வழக்கு இடமும் வேறு இடங்கள்.

(6) சம்மந்தப்பட்ட இடத்தில் கூட்டு புல வரைபடத்தில் வண்டிப்பாதை இல்லை என்றால் சரியல்ல. வண்டிப்பாதையில் ஆக்கிரமிப்பு இருப்பதாக வழக்கு சம்பவத்திற்கு முன்பு புகார் கொடுக்கப்பட்டதா என்று தெரியாது. வண்டிப்பாதை யாருடைய பூமியில் முடிகிறது என்று தெரியாது. JCB வாகனத்திற்கு எவ்வளவு தூரத்தில் படுத்தார் என்று

சொல்லவில்லை என்றால் JCB வாகனத்தின் முன்னால் படுத்தார். அந்த சமயத்தில் என்னிடம் ஆன்ட்ராய்டு அலைபேசி இருந்தது. ஆக்கிரமிப்பு எடுத்ததை மற்றும் செல்லம்மாள் படுத்திருந்ததை புகைப்படம் எடுத்தேன். புகைப்படங்களை காவல் துறையில் கொடுக்கவில்லை.

(7) ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை ஒட்டி எதிரிக்கு பூமி உள்ளதா என்றால் தெரியாது. நான்கு புறமும் அளந்தால் ஆக்கிரமிப்பு குறித்து அளவீடு செய்ய முடியும் என்றால் சரிதான். பக்கத்து பூமிக்காரர்களுக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் எதிரிக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அருகில் உள்ள பூமியில் உள்ளவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை. வண்டித்தடம் எந்த திசையில் சென்றது என்றால் ஞாபகம் இல்லை. JCB முன்பு படுத்தை தவிர வேறு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் வந்தவர்களிடம் சண்டையிட்டதாக சொன்னார். சண்டையிட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை யார் தடுத்து குறுக்காட்டினார்கள் என்றால் பெண் காவலர்கள் தடுத்தார்கள். எத்தனை காவலர்கள் என்றால் 3 பேர். பெண் காவலர்கள் காவல் துறை வாகனத்தில் அங்கு வந்தார்கள். எதிரியை அங்கிருந்து காவல் நிலையம் அழைத்து வந்தார்கள்.

(8) எதிரியை காவல் நிலையம் அழைத்துச் சென்ற பின்பு எவ்வளவு நேரம் ஆக்கிரமிப்பு அகற்றினோம் என்றால் 4 மணி நேரம். ஆக்கிரமிப்பு அகற்றும் வரை நான் அங்கிருந்தேன். மாலை 4 மணி வரை அகற்றினோம். அது வரை நான், கிராம நிர்வாக அலுவலர், நில வருவாய் ஆய்வாளர் அங்கு தான் இருந்தோம். நில வருவாய் ஆய்வாளர் புகார் கொடுத்தார். நான் புகார் கொடுக்கும் போது வரவில்லை. நான் சம்பவ இடத்தில் இருந்த வரை கிராம நிர்வாக அலுவலர் அங்கு இருந்தாரா என்றால் ஆமாம். அதன் பின்பு இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையம் செல்லவில்லை. நில அளவையர் பிரிவில் இருந்து ஊழியர்கள் வந்து அளவீடு செய்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அதன் பின்பு நான் செல்லவில்லை. ஓடை புறம்போக்கு இடத்தில் உள்ள பிரச்சனை சம்மந்தமாக தங்கவேல் என்பவரின் அரசியல் காழ்ப்புணர்வு காரணமான தூண்டுதலின் பேரில் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கில் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு இருந்திருந்தால் முறையாக அளவீடுசெய்து அருகில் உள்ள

பூமியில் உள்ளவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. JCB எந்த பகுதியைச் சேர்ந்தது என்று தெரியாது. JCB வாகனத்தை கிராம நிர்வாக அலுவலர் அழைத்து வந்தார். அ.சா.1 புகார் கொடுப்பதற்கு நான் எழுத்து பூர்வமான அனுமதி எதுவும் கொடுக்கவில்லை.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:55:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**நாள் 12.02.2026 CC 17/2023 அ.சா. 3**

**பெயர் தமிழ்செல்வன்**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி)

(1) 2019 முதல் 2022 வரை நான் மைவாடி கிராமம் 2 கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். தேதி ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்ததா எப்போது தெரியும் என்றால் அங்கு அரசு வண்டிப்பாதை உள்ளது தெரியும் ஆக்கிரமிப்பின் அளவு அளவீடு செய்த போது தெரியும். காலை 11.00 மணிக்கு சென்றோம். நான், நில வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் மற்றும் மற்ற கிராம நிர்வாக அலுவலர்கள் வந்தார்கள். வருவாய் துறை அலுவலர்கள் மொத்தம் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. தங்கவேல் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் ஆக்கிரமிப்பு அகற்ற சென்றேன். அந்த புகாரை நான் படித்துப் பார்த்தேன். புகாரில் யார் ஆக்கிரமிப்பு செய்தததாக சொல்லப்பட்டது என்றால் செல்லம்மாள். செல்லம்மாள் தான் ஆக்கிரமிப்பு செய்திருந்தார் என்று உறுதியாக சம்பவ இடம் செல்லும் வரை தெரியாது.

(2) ஒரு இடத்தை அளக்கும் போது சுற்றியுள்ள இடத்தில் உள்ளவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்படும். வேறு யாருக்கும் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை என்றால் செல்லம்மாள் பூமிக்கு இருபுறமும் புறம்போக்கு நிலங்கள் இருந்ததால் வேறு யாருக்கும் அறிவிப்பு கொடுக்கவில்லை. செல்லம்மாளுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது அவர் வாங்க மறுத்துவிட்டார். கிராம உதவியாளர் அறிவிப்பு கொடுக்கச் சென்றார். நான் நேரில் செல்லவில்லை. கிராம உதவியாளர் பெயர் துளசிமணி. எந்த தேதியில் அறிவிப்பு கொடுத்து எந்த தேதியில் வாங்க மறுத்துவிட்டார் என்று அலுவலக குறிப்பில் உள்ளது. ஆவணங்கள் எனது அலுவலகத்தில் உள்ளது. அதை இந்த வழக்கில் விசாரணையின் போது கொடுக்கவில்லை. சம்பவ இடத்திற்கு செல்லும் போது காவலர்கள் உடன் வரவில்லை. எத்தனை மணிக்கு காவலர்கள் வந்தார்கள் என்று ஞாபகம் இல்லை.

(3) எவ்வளவு நேரம் அளவீடு செய்தோம் என்றால் 2-3 மணி நேரம் அளவீடு

செய்தோம். அதன் பிறகு தான் அங்கு JCB வந்தது. JCB அங்கு வந்து ஆக்கிரமிப்பை அகற்ற சுமார் 3–4 மணி நேரம் ஆகியிருக்கும் என்றால் சரிதான். வருவாய் துறையினர் தவிர தனிப்பட்ட நபர்கள் இல்லை என்றால் சரியல்ல இருந்தார்கள். எத்தனை நபர்கள் என்று தெரியாது. எதிரி JCB முன்பாக படுத்ததாக சொல்லும் சமயத்திற்கு எவ்வளவு நேரம் கழித்து காவலர்கள் அங்கு வந்தார்கள் என்றால் தகவல் சொன்ன உடன் உடனே வந்துவிட்டார்கள். ஆண் மற்றும் பெண் காவலர்கள் வந்தார்கள் எத்தனை பேர் என்று சரியாக தெரியாது. மடத்துக்குளம் காவல் நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். இரு மற்றும் நான்கு சக்கர வாகனத்தில் வந்தார்கள். காவல் ஆய்வாளரும் வந்தார். காவல் துறையினருக்கு வட்டாட்சியர் தகவல் சொன்னார்.

(4) காவலர்கள் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அழைத்துச் சென்ற பின்பு 2–3 மணி நேரத்தில் ஆக்கிரமிப்பை அகற்றினோம். ஆக்கிரமிப்பை அகற்றிய போது செல்லம்மாளின் கணவர் மற்றும் மகன் இருந்தார்கள். ஆக்கிரமிப்பை அகற்றிய போது எதிரியின் கணவர் ஆட்சேபணை செய்தார். நான், வட்டாட்சியர், நில வருவாய் ஆய்வாளர் ஆகியோர் ஆக்கிரமிப்பை அகற்றும் வரை அங்கு தான் இருந்தோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் வட்டாட்சியருடன் நில வருவாய் ஆய்வாளர் வந்தார். ஆக்கிரமிப்பை அகற்றிய போது தங்கவேல் உடன் இருந்தார் என்றால் சரிதான். எத்தனை அடி அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதா நான் போலீசில் சொல்லவில்லை என்றால் சரிதான். 10 மரங்களுக்குள் நீக்கியிருப்போம் எத்தனை என்று சரியாக ஞாபகம் இல்லை. அந்த மரங்கள் பலன் தரக்கூடியது மற்றும் இள மரங்களும் இருந்தது. நீக்கப்பட்ட தென்னை மரங்களை அங்கேயே போடப்பட்டது.

(5) அளவீடு செய்யும் போது எதிரி பேசிக்கொண்டிருந்தார் JCB வைத்து எடுக்கும் போது நடுவே வந்து படுத்துவிட்டார். பூமியை அளப்பதற்கு தான் எதிரிக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. நான் அன்றைய தினம் காவல் நிலையத்திற்கு வரவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திற்கு பின் இந்த வழக்கு சம்மந்தமாக நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை. வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கும் நான் வரவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக அழைப்பாணை பெறும்போது தான் போலீசாரை

சந்தித்தேன். எதிரி பூமிக்கும், ஓடைக்கும் இடையே உள்ள நிலம் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் ஒரு தரப்பினர் என்றால் ஞாபகம் இல்லை. அந்த வழக்கை வாபஸ் பெற வற்புறுத்த தங்கவேல் என்பவரின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நான் ஆன்ட்ராய்டு அலைபேசி வைத்திருந்தேன். புகைப்படம் எடுத்தேன் ஆனால் அழிந்துவிட்டது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:56:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்